<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.</u>

<u>அசல் வழக்கு எண்.69/2024</u>

பெயர் : முருகேசன் த/பெ. துரைசாமி நாள் : 18.04.2026

<u>வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னிடம் காட்டப்படும் ரீ.ச.752க்கான புலவரைபடம் என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.3ஆகவும்,** ரீ.ச.751/2 க்காக 'அ' பதிவேடு என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.4ஆகவும்,** ரீ.ச.751/3 க்காக 'அ' பதிவேடு என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.5ஆகவும்,** ரீ.ச.751/1 க்காக 'அ' பதிவேடு என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.6ஆகவும்,** ரீ.ச.751/7 க்காக 'அ' பதிவேடு என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.1 வரைபடத்தில் பிரதிவாதியின் பூமியை ஒட்டி மேல்புறத்தில் வாழைமரம் காட்டப் பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த வாழைமரம் கம்பிவேலி போட்டதற்கு பிறகு தான் வைத்தார்கள். நீ.ம.சா.1 வரைபடத்தில் காணப்படும் வாழைமரங்கள் கம்பி வேலி போடுவதற்கு ஆணையர் பார்வையிட்டபோது இருந்தது என்றால் அப்போது ஒரு சில மரம் தான் இருந்தது. தற்போது முழுவதும் வாழைமரங்கள் வைத்துள்ளார்கள். நான் வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. நீ.ம.சா.4 வரைபடத்திலும் வாழைகன்றுகள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், கம்பிவேலி போட்ட பிறகு முழுவதுமான வாழை மரங்கள் வைத்துள்ளார்கள் அதனை காண்பித்துள்ளார். வாழைமரங்களுக்கும் கம்பி வேலிக்கும் இடைவெளி எவ்வளவு உள்ளது என்றால் இடைவெளியே இல்லை. 2022ம் வருடம் இ.ம.எண்.5/2022 தாக்கல் செய்து நான் தாக்கல் செய்த தாவாவை திருத்தம் செய்ய கோட்டுள்ளேன் என்றால் சரிதான், கம்பி வேலி எடுக்கக்கோரி தாக்கல் செய்தேன். 2022 ல் தாக்கல் செய்த மனுவில் பாதையை மறைத்து கம்பி வேலி போட்டுள்ளார்கள் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இதுவரை பாதையை அழித்து கல்கற்கள் கட்டியதாகவும், பாதையை மறைத்து கம்பி வேலி போட்டுள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3. தாவா தாக்கல் செய்தபோது பழைய க.ச.662சி அதன் ரீ.ச.751/1 தவிர வேறு எந்த ரீ.சர்வே எண்களையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஏனென்றால் அ பதிவேட்டில் நான் வழக்கு தாக்கல் செய்தபோது ரீ.ச.751/1 என குறிப்பிட்டுள்ளதால் அதை குறிப்பிட்டுள்ளேன். ரீ.ச.751/1 காலையில் சென்று எனது பூமியை அடைய முடியாது என்றால் சரிதான். ரீ.ச.751/1 காலையில் சுமார் 0.14-1/2 சென்ட் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி ரீ.ச.751/1ல் தனக்கு பாத்தியப்பட்ட பூமிக்கும், அதற்கு தென்புறமுள்ள ரீ.ச.751/2,3,4A மற்றும் மற்ற பூமிகளில் தான் கம்பி வேலி போட்டுள்ளார் என்றும், பழைய க.ச.662சில் கம்பி வேலி போடவில்லை என்றால் சரியல்ல. பழைய க.ச.662சி ன் சரியான புதிய ரீ.சர்வே எண்ணை தெரியாமல் தவறாக ரீ.சர்வே எண்ணை குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல, ரீ.சர்வே எண் தவறாக உள்ளது.

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.04.18 02:22:36 +0530

4. சரியான ரீ.சர்வே எண் குறிப்பிட்டால் இரயில்வே துறைக்கு பாத்தியப்பட்ட பூமி என்பதால் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. இரயில்வே துறையினரையும் தாவாவில் ஒரு தேவையான தரப்பினர் என்றால் சரியல்ல. கம்பி வேலி போட்ட சமயத்தில் வாழை மரங்கள் எப்போது நட்டார்கள் என்றால் கம்பி வேலி போட்டு ஒரு வாரத்தில் நட்டார்கள். கம்பிவேலியை ஒட்டி கிழபுறமாக வண்டிபாதையில் வடக்கிலிருந்து தெற்குவரை நட்டுள்ளார்கள். கம்பிவேலியை ஒட்டி வாழைமரங்கள் ஒரு வாரத்தில் பிரதிவாதிகள் நட்டதாக நான் குறிப்பிட்டுள்ள நிலையில் அதனை எனது வழக்குரையில் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பிரதிவாதிகள் பாதையை அழித்து கம்பி வேலி போடவில்லை என்றும், கம்பிவேலிக்கு மேற்குபுறமாக இரயில்வே பூமியில் பாதை உள்ளது என்றும், அதனால் நான் எனது வழக்குரையில் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

5. நான் தற்போது மேற்கண்டவாறு தான் தாவா சொத்தின் அமைப்பு உள்ளது என்று சொன்னால் இல்லை, பாதையை அழித்து தான் வாழைமரம் மற்றும் கம்பி வேலி அமைத்துள்ளார்கள். பிரதிவாதி அவருடைய பூமியில் தான் கம்பி வேலி போட்டுள்ளார் என்றும், அதை நான் மறைத்து பிரதிவாதியின் பூமிக்குள் தடம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.18 02:22:40 +0530